# செம்மணி

நிலம் 3 துகள் 131 வள்ளுவர் ஆண்டு 2052, 21 - 27 தை 2023 வாரமலர் பக்கங்கள் 19




## முதல்வரானார் ஆனல்ட் வர்த்தமானி வெளியீடு

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய முதல்வராக இம்மானுவல் ஆனல்ட் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்லத்துரை பிரணவநாதன் இது தொடர்பான அறிவிப்பை இன்று காலை வர்த்தமானி மூலம் விடுத்தார்.

யாழ். மாநகர சபைக்குப் புதிய முதல்வரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் கடந்த 19ஆம் திகதி கூட்டப்பட்டது. 45 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 24 உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர். அதனடிப்படையில் கூட்டம் தொடங்கப்பட்டு தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் ஆனல்ட்டின் பெயர் முன்மொழியப்பட்டது.

அந்த முன்மொழிவுக்கு ஆட்சேபனை தெரிவித்து நான்கு உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். இதனால் கூட்டம் கோரமிழந்துபோனது என்று தெரிவித்த உள்ளூராட்சி ஆணையாளர், முதல்வர் தெரிவுக்கான அடுத்த கூட்டம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்று கூறி கூட்டத்தை முடித்து

☞ பக்கம் 19

## தேர்தலுக்கான திகதி இன்று வெளிவரும்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திகதி இன்று வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கேட்கப்பட்டிருந்த நிலையில் நேற்று நண்பகல் 12 மணியுடன் அதற்கான கட்டுப்பணம் செலுத்தும் காலக்கெடு முடிவடைந்தது. கடந்த புதன்கிழமை காலை 8.30 மணி முதல் இன்று நண்பகல் 12 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டது. காலக்கெடு முடிந்த பின்னர் எந்தவொரு வேட்புமனுவும் ஏற்றுக்கொள்ளப்படாது.

இன்று வேட்புமனு தாக்கல் நிறைவடைந்ததும் நண்பகல் 12 மணி முதல் 1.30 வரையான ஒன்றரை மணித்தியாலங்கள்

☞ பக்கம் 02

## தேயிலை உற்பத்தி 2022இல் 2 தசாப்தங்களில் கடும் வீழ்ச்சி

இலங்கையின் தேயிலை உற்பத்தி கடந்த 25 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 2022ஆம் ஆண்டில் கடும் வீழ்ச்சியடைந்துள்ளது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. முன்னாள் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச திடீரெனக் கொண்டுவந்த இரசாயன உரங்களுக்கான தடையே இதற்கான பிரதான காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

2022ஆம் ஆண்டில் 250.19 மில்லியன் கிலோ தேயிலை நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடப்படும்போது 13 சதவீத வீழ்ச்சியாகும். அத்துடன் 1997ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை ஏற்றுமதி செய்த ஆகக்குறைந்த அளவு மாகும்.

"மோசமான விநியோகத்துடன் கூடிய சவாலான ஆண்டு 2022. உள்ளூரில் பணியாளர்களின் பிரச்சினை, பன்னாட்டளவில் எதிர்கொண்ட சவால்கள் என்பவற்றுக்கு மத்தியில் 148 நாடுகளுக்கு 250.19 மில்லியன் கிலோ தேயிலையைத்தான் ஏற்றுமதி செய்ய முடிந்தது" என்று தேயிலை ஏற்றுமதி முகவர் அமைப்பான ஏசியா சியாக்கா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

☞ பக்கம் 02

## மறக்காமல் மகிந்தவையும் சந்தித்தார் இந்திய அமைச்சர்

இரண்டு நாள் பயணமாக இலங்கை வந்திருந்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், புறப்படுவதற்கு முன்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தனது பயணத்தின்போது அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்த்தன, அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி,

☞ பக்கம் 02



செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**



# மறக்கப்பட்ட மனிதர்கள்

கறுப்பு ஜூலை என்றால் தமிழர்கள் அனைவருக்கும் தெரியும். 1983 ஆடி மாதம் தமிழ் மக்களுக்கு எதிராக நாடு முழுவதும் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கல வரங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் கொன்றொழிக்கப் பட்டும் பல கோடி ரூபா சொத்துக்கள் நாசமாக்கப்பட்டும் நிகழ்த்தப்பட்ட கொடூரங்கள் வாயிலாக கறுப்பு ஜூலை மக்கள் மனங்களில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளது. அதேயளவிற்கு முக்கியத்துவம் மிக்கதொன்றாக இருக் கும் கறுப்பு ஜனவரி குறித்து யாரும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. இலங்கையில் கொல்லப்பட்ட பத்திரி கையாளர்களுக்காக இந்த கறுப்பு ஜனவரி நினைவுகூரப்ப டுகின்றது.

2009ஆம் ஆண்டு தை மாதத்தில் சண்டே லீடர் பத்தி ரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலைசெய்யப் பட்டார். அதே மாதத்தில் யாழ்ப்பாணத்தில் சுப்பிரம ணியம் ராமச்சந்திரன் என்ற தமிழ்ப் பத்திரிகையாளரும் கொல்லப்பட்டார். தை மாதம் 24ஆம் நாள் பத்திரிகை யாளரான எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டார். அந்த மாதத்திலேயே கொழும்பிலிருந்து இயங்கிவரும் ஊடகமான சிரச தொலைக்காட்சி அலுவலகமும் தீக்கிரையாக்கப்பட்டது.

இதனால் பத்திரிகையாளர்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகளை, கொலைகளை, நீதிக்குப் புறம்பான தண்ட னைகளை நினைவுகூரும் வகையில் கறுப்பு ஜனவரி கடைப்பிடிக்கப்படுகின்றது.

இலங்கையில் கொல்லப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் அனைவருமே மக்களின் கருத்த றியும் உரிமையை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டார்கள் என்கிற ஒரே காரணத்திற்காகவே கொல்லப்பட்டார்கள். தமிழ் ஊடகவியலாளர்களான சிவராம், நிமலராஜன், நடேசன் உட்பட அனைவரும் அதே காரணத்திற்காகத்தான் கொல்லப்பட்டார்கள். எனினும் அவர்களுக்கு இது வரையில் நீதி கிடைக்கவில்லை.

அரசுக்கும் ஏனைய தரப்புக்களுக்கும் இடையில் நடக் கும் பேச்சுக்களில் ஒரு ஓரமான கோரிக்கையாகக்கூட அநீதிக்குள்ளான பத்திரிகையாளர்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்று எந்தவொரு அழுத்தமும் வழங்கப்படுவதில்லை. உயிரிழந்த பத்திரிகையாளர்கள் மறக்கப்பட்ட மனிதர்களாகவே கடந்து செல்லப்படுகி றார்கள்.

கருத்துச் சுதந்திரம் இல்லாத ஒரு சமூகம் எப்போதும் நிறைவானதாக இருக்கமுடியாது. அந்தச் சுதந்திரத்திற் காகப் போராடிய ஊடகப் போராளிகளை இந்தச் சமூகம் மறந்துவிடுவதும் அவர்களுக்கு நீதியைப் பெற்றுத்தரப் பின்னிற்பதும் நியாயமானது அல்ல. இனிவரும் காலங்க ளிலாவது தீர்வு என்று வருகின்றபோது ஊடகவியலாளர்க ளுக்கான நீதியும் அதிலொரு முக்கிய அம்சமாக முன்வைக்கப்படவேண்டும்.இது எல்லா அரசியல் தரப் புக்களுக்குமான கோரிக்கை.

## மறக்காமல்...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலை வர்கள் எனப் பல தரப்பட்டவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்பாக முன்னாள் ஜனாதிபதியும் பொது ஜன பெரமுன கட்சியின் தலைவரு மான மகிந்த ராஜபக்சவையும் சந்தித்து, அரசியல் கள நிலை தொடர்பில் பேச்சு நடத்தினார். அவருடன் நடத் தப்பட்ட பேச்சுக்கள் தொடர்பில் உத்தியோகபூர்வமான தகவல்கள் வெளியிடப்படவில்லை.

பொருளாதார நெருக்கடி, சீனாவுடனான உறவு, இந்திய முதலீடுகள், இனப்பிரச்சினைக்கான தீர்வு ஆகிய விட யங்கள் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட முக்கிய அம்சங்களாக இருந்ததாகத் தெரியவருகின்றது.

முன்னதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந் தித்த பின்னர் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய ஜெய்சங்கர், இலங்கை அரசு அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண் டும் என்று வலியுறுத்தினார். அத்தோடு விரைவில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்தித்த தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், தீர்வு தொடர்பான பேச்சுக்களில் அரசு கொடுத்த வாக்கு றுதிகளை நிறைவேற்றவில்லை என்று அவரிடம் முறை யிட்டனர். பேச்சுக்களில் முன்னேற்றமில்லை, அதனால் இந்தியா காத்திரமான பங்களிப்பை இது விடயத்தில் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், "அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தினேன். கூட்டுச் செய்தியாளர் சந்திப்பிலும் பகிரங்கமாக அறிவித்தேன்.13 ஐ முழுமையாக அமுலாக்க இந்தியா தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும்" என்றார்.

"இருப்பதை நடைமுறைப்படுத்தாவிட்டால், அதுவும் இல்லாமல்போகலாம். எனவே, இடைக்காலத் தீர்வாக வேனும் அதை ஏற்கவேண்டும். தீர்வைப் பற்றி பேசிக் கொண்டிருப்பது மட்டும் தீர்வு அல்ல" என்றும் அவர் தமிழ்த் தலைவர்களுக்கு அறிவுறுத்தினார்.

## தேர்தலுக்கான ...

ஆட்சேபனைகளை தெரிவிப்பதற்கான காலமாகும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

கட்சிகள், மற்றைய கட்சிகளின் தவறுகள், விதி மீறல்க ளைச் சுட்டிக்காட்சி அந்த நேரத்தில் தமது ஆட்சேபனை யைத் தெரிவிக்க முடியும்.

"ஆட்சேபனை தெரிவிப்பதற்கான காலம் நிறைவ டைந்ததன் பின்னரே தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்கள் தொடர்பில் அறிவிக்கப்படும், இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்படும்" என்று தேர்தல் கள் ஆணையாளர் தெரிவித்தார்.

## தேயிலை...

"ஆண்டு முழுவதும் காலநிலை சீராக, சாதகமாக இருந்த போதும் தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டது. முழு ஆண்டிலும் 252 மில்லியன் கிலோ தேயிலையே உற்பத்தி செய்யப்பட்டன. 2021ஆம் ஆண்டில் இது 299 கிலோவாக இருந்தது. ஏற்றுமதி மூலம் 2022ஆம் ஆண் டில் 1.27 பில்லியன் அமெ. டொலர் நிதி கிடைத்தது" என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

# பிரிவினையைத் தூண்டுகிறாரா சச்சிதானந்தன்...?



நாகராசா

யாழ்ப்பாண மாநகர முதல்வர் தெரிவு விடயத்தில் மறவன்புலவு சச்சிதானந்தன் புதிதாக ஒரு புரளியைக் கிளப்பிவிட்டிருக்கிறார். எதிர்வரும் மாநகரசபை முதல்வர் தெரிவில் போட்டியிடுவதற்கு ஆர்னோல்ட்டை அனுமதித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 19.1.2023அன்று அறிவித்தல் ஒன்றை வெளியிட்டது. அதற்கு எதிராகவே சிவசேனாவின் தலைவரான சச்சிதானந்தன் கருத்து வெளியிட்டுள்ளார். அவரது கருத்துப்படி, சைவ சமயி ஒருவரே யாழ்ப்பாண மாநகர சபை முதல்வராக வர முடியும் என்கிறார். ஏற்கனவே ஆர்னோல்ட் யாழ்ப்பாண மாநகர முதல்வராகக் கடமையாற்றியபோது சச்சிதானந்தன் சுயநினைவற்று இருந்தாரா என்பது கேள்விக்குரியது. மதத் தலைவர் ஒருவர் இன, மதங்களுக்கு இடையில் பிரிவினையை ஏற்படுத்துபவராக இருக்கக்கூடாது என்று அத்தே ஞானசார தேரருக்கு எதிராகப் பல குரல்கள் எழுந்தன. அதே போன்ற விடயத்தையே சச்சிதானந்தனும் முன்னெடுத்து வருகிறார். இவருக்கும் ஞானசாரருக்கும் உறவுண்டு.

**“இந்து மதத் தலைவர்களிடமோ, கிறிஸ்தவ மதத் தலைவர்களிடமோ, அவற்றைப் பின்பற்றும் மக்களிடமோ மத ரீதியான பிரிவினைப் பேச்சுகள் இருப்பதாகத் தெரியவில்லை”**


**பிரிவினைக்கு வித்திடும் கருத்துகள்**

கி.பி 1505இல் போர்த்துக்கேயர்கள் இலங்கைக்கு வந்தபின்னரே கத்தோலிக்க மதம் இலங்கையில் அறி முகமானது. அதன் பின்னர் இன்றுவரை யாழ்ப்பாணத்து ஆயர்களாக ஊர்காவற்றுறை, கரம்பென் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கும் இந்துக்களுக்கும் பெரிய முரண்பாடுகள் எதுவும் இருக்கவில்லை. தந்தை செல்வா, டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன், அல்பிரட் துரையப்பா, சூசைதாசன், எக்ஸ்.எம். செல்லத்தம்பு, செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், ஆபிரகாம் சுமந்திரன் ஆகிய பலர் தமிழ் அரசியலிலும் காலூன்றியுள்ளனர். இந்து மதத் தலைவர்களிடமோ, கிறிஸ்தவ மதத் தலைவர்களிடமோ, அவற்றைப் பின்பற்றும் மக்களிடமோ மத ரீதியான பிரிவினைப் பேச்சுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் சச்சிதானந்தனோ, யாழ்ப்பாணம் சிவபூமி. இங்கு கிறிஸ்தவர்களுக்கு இடமில்லை என்பதாகக் கருத்துக் கூறுவது அபத்தமாகும். அவர் ஒரு மதப்பிரிவைச் சார்ந்து தனிப்பட்ட கருத்துக்களைக்கூற முடியும். கிறிஸ்தவர்கள் அரச அதிபராகவோ மாநகர முதல்வராகவோ வர முடியாது என்று கூறுவது தவறானது. அது மக்கள் சார்ந்த நிர்வாகம் சார்ந்த விடயம் என்பதால் தமிழ் மக்களின் விடயங்களைச் சச்சிதானந்தன் என்கிற ஒரு நபர் தீர்மானிக்க முடியாது.

**இந்துக்களும் சைவர்களும் மதம் மாறாதிருக்க...**

அண்மையில் சச்சிதானந்தன் தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்தது. அதில் சிவசேனை அமைப்பைச் சேர்ந்த 25க்கும் குறைவானோர் பங்குபற்றினர். புதிதாக வரவிருக்கும் அரச அதிபர் மக்களை மதம் மாற்றிவிடுவார் என்பதாக அவர்களின் போராட்டக் கோஷம் இருந்தது. யார் அந்த அரச அதிபர் என்று அவரது பெயர் கூறப் படாவிட்டாலும் அவர்கள் சுட்டிக்காட்டிய நபர் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் அரச அதிபராகப் பதவி வகிக்கும் ரூபாவதி கேதீஸ்வரனே என்பது அனைவருக்கும் தெரிந்தது.

யாழ்ப்பாணம் சிவபூமி இங்கு மத மாற்றம் இருக்கக் கூடாது என்பதே சிவசேனாவின் வாதமாகும். இவ்வளவு பெருமைகளைக் கொண்ட யாழ்ப்பாணத்தவர்கள் கிபி 1505இல் போர்த்துக்கேயரின் வருகையுடன் கத்தோலிக்க மதத்தையும் ஒல்லாந்தர் வந்தபோது புரட்டஸ்தாந்து



என்ற கிறிஸ்தவப் பிரிவையும் உள்வாங்கினர்.

**ரூபாவதி மீதான குற்றச்சட்டு**

ரூபாவதி கேதீஸ்வரன் கிளிநொச்சி ஜெயந்தி நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவரது கணவர் கேதீஸ் வரன் மட்டக்களப்பு - களுதாவளையைச் சேர்ந்தவர். அவர் புரட்டஸ்தாந்து மதப் போதகர். இவ்வளவும்தான் ரூபாவதிக்கான கிறிஸ்தவத் தொடர்பு. அவர் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து பல்வேறு பகுதிகளில் வௌ;வேறு பதவிகளை வகித்தவர். அரச அதிபராகப் பதவியாற்றத் தொடங்கியே 12 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துவிட்டார். இன்னும் ஓரிரு ஆண்டுகளில் ஓய்வு பெறவிருக்கும் அவர் யாழ்ப்பாணத்துக்கு அரச அதிபராக வந்தால் இங்குள்ள இந்துக்களும் சைவர்களும் மதம் மாற்றப்பட்டுவிடுவார்கள் என்று சச்சிதானந்தன் கூறுவது எந்த வகையிலும் ஏற்றுக் கொ;ளத்தக்கதல்ல. கடந்த காலங்களில் ரூபாவதி கேதீஸ்வரனால் எத்தனை பேர் மதம் மாற்றப்பட்டுள்ளார்கள் என்ற புள்ளிவிவரத்தைச் சச்சிதானந்தன் வெளியிட வேண்டும். அதை வைத்து சிவசேனா அமைப்பு நீதிமன்றத்தை நாடமுடியும். சச்சிதா னந்தன் முன்னர் ஐ.நா உணவு வேளான் கருத்திட்டத்தில் ஆலோசகராகப் பணியாற்றியவர். அப்போது அவருடன் பணியாற்றிய பெரும்பாலானவர்கள் கிறிஸ்தவர்கள். தற்போது கிறிஸ்தவர்கள் கெட்டவர்கள் என்று அவர் கோசம் எழுப்புவது அவரது சொந்த நலனுக்காக என்று புரிகி றது. யாழ்ப்பாணத்தில் வாழும் இந்து சைவர்கள் சச்சி தானந்தனுடன் பெரும் திரளாக இந்த விடயத்தில் ஒன்றுகூடப் போவதில்லை. சச்சி

யாருடையதோ நலனுக்காக இலங்கைத் தமிழர் மத்தியில் இந்து - கிறிஸ்தவ மோதல் ஒன்றை ஏற்படுத்த பல வருடங்களாக முனைந்து வருவது தெரிகிறது. இது விடயத்தில் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் நிதானமாக நடந்து கொள்வது அவசியம்.

ஆரம்ப காலத்தில் இருந்து காவியுடை அணிந்தவரல்ல மறவன் புலவு சச்சிதானந்தன். ஆங்கில நாகரீக உடையணிந்து செயற்பட்ட இவர் தற்போது தன்னைக் காவியுடையால் உருமறைப்புச் செய்து களமிறங்கியிருக்கிறார். தமிழர்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் இவரது நடவடிக்கைகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது அவசியம்.

சிவசேன அமைப்பு மதத்தை வளர்ப்பதோ, சைவ மக்களுக்கான நலன்புரி சேவைகளைச் செய்வதோ, மக்களை மதம் மாறாவிடாது பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளை ஏற்படுத்துவதோ, சைவ மாணவர்க ளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதோ




என எதைச் செய்தாலும் அது நற்பணியாக இருக்கும். அதைவிடுத்து கிறிஸ்தவர்கள் முக்கிய பதவிகளில் இருக்கக்கூடாது என்று சிங்கள ஆட்சியாளர்களே கூறாத நிலையில் தமிழரான சச்சிதானந்தன் கூறுவது கவனத்தில் கொள்ளப்படக்கூடாதது.

# லீகுவான்யூ உன்னை வணங்குகின்றேன்



வடஅல்லை மகேஸ்

சிங்கப்பூரை மிக நீண்ட காலமாக
கட்டி வளர்த்தவர் லீகுவான்யூ
அவர் ஒரு பரிஸ்டர்
நாட்டின் நீண்டகால எதிர்க்கட்சியின்
ஒரேயொரு பிரதிநியாக
எப்போதும் தெரிவு செய்யப்பட்டவர்
ஜெயரட்ணம் எனும் தமிழர்
அவரும் பரிஸ்டர்
அவரும் குற்றங்களை சுட்டிக்காட்டி
சுட்டிக்காட்டி நெறிப்படுத்தினார்.
அதனையும் ஏற்றுக்கொண்டு
நாட்டை கட்டியெழுப்பினார் லீகுவான்யூ!
எதுவும் இல்லாத நாட்டை
எது இங்கில்லை என கேட்க வைத்தவர்
அதன் நிலத்துக்கு போடப்பட்டிருக்கும்
மண்கூட இந்தோனேசியாவினது
தண்ணீர் மலேசியாவினது
மின்சாரம் மலேசியாவினது
தொழிற்சாலைகள் சிங்கப்பூரினுடையது
அதற்கான மூலப்பொருட்களோ, இயந்திரங்களோ
ஜேர்மன், ஜப்பான் ...
அவர்களுக்கும் உற்பத்திகள் ஏற்றுமதி
நீண்ட கால பிரயத்தனம்
அதற்கான ஒற்றுமை, தேசப்பற்று.

இங்கும் எமது அரசியல்
பரிஸ்டர், அப்புக்காத்து கைகளில்
அழகாக அரசியல் பிழைப்பு
இனவாதம் பக்கவாதமாகப் புரையோட
பலமாக கோசங்கள் செய்து
அரசாங்கம் அமைத்து
இளசுகளுக்கும் விதைத்து
வலுப்பெற வைக்கும் கூட்டம்
கோ~ங்கள் மறைவிலேயே
பகற் கொள்ளை
இங்கோ எங்கள் சட்டவாளர்கள்
கோசங்கள் எழுப்பி எழுப்பியே - எம்
அடிவேரை அசைக்கிறார்கள்.
அந்தநாள் முதல் இந்தநாள் வரை
அங்கே வரப்போறாங்கள்
இங்கே வரப்போறாங்கள் என
இவர்கள் சொல்ல
அவர்கள் வந்துவிடுவார்கள்
அதைச் செய்யப் போறாங்கள்
இதைச் செய்யப்போறாங்கள்
என்று இவர்கள் குறிசொல்ல
அவர்கள் செய்துவிடுவார்கள்...
எங்கப்பன் குதிருக்குள் இல்லை - என்று
இவர்கள் சொல்ல - அவர்கள்
அதையே எரித்துவிடுவார்கள்
இதுவே தொடர்கதை
அவர்களைச் செய்யத் தூண்டுபவர்களாக
வழிகாட்டுபவர்களாக நாங்கள்
எங்கள் அழிவுக்கான
பாதையை வகுத்துக்கொடுப்பவர்களாக...
சும்மா இருந்த சங்கை ஊதி ஊதி...
பலரைத் தொலைத்து விட்டோம்
பலரை தொலைதேசம் அனுப்பிட்டோம்
இன்னும் அனுப்புகிறோம்
இங்கு கால் செருப்பாய்
கரைந்து போனோம்
அரசாங்கம் அமைத்துக் கொழுத்தவர்களும்
அதை மூடிமறைத்து வளர்பவர்களும் - இந்த
தேசத்தைக் கட்டியெழுப்பப்போவதில்லை - எம்
இனக்குரோதங்களையும் நிறுத்தப்போவதில்லை
வெறும் வங்குறோத்து அரசியல்!
எங்கள் கண்முன்னே தேசம் அழிகிறது
மனம் அழுகிறது - எங்கள்
தேசத்தின் இழிநிலையெண்ணி!
வாரிசுகளின் எதிர்காலத்தையெண்ணி...
இலங்கையை சிங்கப்பூராக்குவோம் - என
ஒரு தலைவர் கோஷத்தோடு வருவார்
அவர ;காலம் போய்விடும்
அதுபோலவே அடுத்தவர் வருவார்
அவரும் ஐந்து வருடத்தில்...
எல்லா வளமும் நிறைந்த நாட்டை
ஒன்றும் இல்லா நாடாக்கி
குட்டிச்சுவர் ஆக்குகிறார்.
மக்களை ஏதிலிகள் ஆக்குகிறார்
ஆம்
லீகுவான்யூ உன்னை வணங்குகின்றேன்!

சிறைக்குள்... 92

# பாலியல் சித்திரவதைகள்



தர்மராசா

பாலியல் ரீதியாகச் செய்யப்படுகின்ற துன்புறுத்தல்கள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. வக்கிரமாகப் பேசுவது, தூஷணத்தில் பேசுவது, பாலியல் ரீதியில் பயன்படுத்துவது ஆகிய செயற்பாடுகள் இதில் அடங்கும். சித்திரவதைகளின் இன்னோர் அம்சம் உளவியல் ரீதியாக அமைகிறது. கைதானவர்களைத் துன்பப்படுத்தி அவர்களுக்கு வெறுமையை உண்டாக்கி மன அழுத்தத்தை ஏற்படுத்துவார்கள். சிறிய அறைகளில் கடும் இருளில் அல்லது கடும் வெளிச்சத்தில் அடைத்து வைத்திருப்பார்கள். இவ்வாறானவற்றால் அவஸ்தைப்படுத்தும்போது விசாரணையாளர்களின் பிடிக்குள் சிக்கியிருக்கின்ற (விசாரணையாளர்கள் ஏனையோரையும் பிடித்திருப்பதாகச் சொல்வார்கள்) மனைவி, பிள்ளைகள், தாய், சகோரதர்களுக்கு என்ன நடக்கிறதோ என்ற ஏக்கம் மேலோங்குவதுடன் தன்னை யாரும் வந்து காப்பாற்றப்போவதில்லை என்ற எண்ணமும் தோன்றுகிறது. அதனால் எதையும் திடமாகவோ நிதானமாகவோ யோசிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. தனக்கு என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று தெரியாமலே தடுத்து வைக்கப்பட்டிருப்பவர் சோர்ந்து போய் விடுகிறார்.

உணவுண்பது, மலம் கழிப்பது எல்லாம் ஒரு சிறிய அறைக்குள்ளேயே இருப்பதும், நடந்து திரியக்கூட இடமில்லாது இருப்பதும், நேரம் என்ன என்பதை எப்போதுமே ஊகிக்க முடியாதிருப்பதும் பகலா? இரவா? என்று அறியமுடியாதிருப்பதும் பெரும் அவஸ்தையைக் கைதிக்கு ஏற்படுத்தும். இதனால் ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகம்போல இருக்கும். நம்பிக்கையீனம் வளர்ந்துகொண்டிருக்கும். இது ஒரு பொதுவான உணர்வாக சமூக வாழ்க்கையில் பழக்கப்பட்ட மனிதனால் தாங்க முடியாதிருக்கும். இதன் யதார்த்தத்தை உணர்ந்து சாவு வரும் வரை எதிர்ப்போம் என நினைத்த கைதிகளும் உண்டு.

**மிகவும் மிடுக்கான கைதி**

ஒருவர் 1996இல் கல்கிசை சிறப்புப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். அப்போது சயனைற் அருந்திய அவரைப் புலனாய்வாளர்கள் ஒருவாறாகக் காப்பாற்றிவிட்டார்கள். எனினும் அவர் விசாரணையின்போது எதையும் சொல்லத்


தயாராக இருக்கவில்லை.

அங்கிருந்த விசாரணையாளரான ஜெயரட்ணம் என்ற தமிழ் அதிகாரி (பின்னாளில் இவர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டார் என்று தகவல் வெளியாகி இருந்தது) அந்தக் கைதியை விசாரிக்க முற்பட்டபோது, 'உனக்கு நான் எந்தப் பதிலும் சொல்ல மாட்டேன். எதிரி என்னை விசாரிக்கலாம், நீ துரோகி. அதனால் நான் எதையும் சொல்ல மாட்டேன். சந்தர்ப்பம் கிடைத்தால் உன்னை நான் தான் கொல்வேன்' என்றுள்ளார் அந்தக் கைதி.

அந்தக் கைதி மிக மிடுக்காக இருந்தால் அவரை யாராலும் நெருங்க முடியவில்லை. நிலாப்பின் என்ற விசாரணையாளனின் கழுத்தைத் தனது இரு கைகளிலும் போடப்பட்ட விலங்குகளால் ஒரு தடவை நசித்துக் கொல்ல முயற்சித்துள்ளார் அந்தக் கைதி. இன்னொரு தடவை தனக்கு முன்னாலுள்ள மேசையைப் பலமாகத் தள்ளிச் சுவருடன் சேரத்து விசாரணையாளரை



**சித்திரவதைகளின் இன்னோர் அம்சம் உளவியல் ரீதியாக அமைகிறது. கைதானவர்களைத் துன்பப்படுத்தி அவர்களுக்கு வெறுமையை உண்டாக்கி மன அழுத்தத்தை ஏற்படுத்துவார்கள்**



நசித்துக் கொல்ல முற்பட்டுள்ளார்.


அதிகமாகப் பயமுறுத்துவதும் ஓர் உளவியல் ரீதியான சித்திரவதையாகும். பயங்கரமான சித்திரவதை முறைகள் பற்றிக் கைதிக்கு விவரிப்பது, கைது செய்யப்பட்டவரின் மனைவி அல்லது கணவன், குழந்தை, சகோதரர்களைச் சித்திரவதை செய்யப்போவதாகப் பயமுறுத்துவது, ஏனையோரை சித்திரவதை செய்வதைப் பார்க்க வைப்பது போன்றன இதில் அடங்கும்.

இவ்வாறான நிலாயில் கைதியிடமிருந்து தான் சித்திரவதை செய்யப்படவில்லை என்ற எழுத்து மூலக் கடிதத்தைப் பெறும், சித்திரவதை செய்யப்படவில்லை என்று மருத்துவ அறிக்கை பெறும் நடவடிக்கைகளைச் செய்து விசாரணையாளர்கள் சட்டபூர்வமாகத் தப்பித்துக் கொள்கின்றனர். ஆனால் உளவியல் ரீதியான சித்திரவதைகளால், காயங்கள், அடையாளங்கள் ஏற்படாவிட்டாலும் அது மோசமாகக் கைதியைப் பாதிக்கின்றது என்று வெளியில் தெரிவதில்லை.

(தொடரும்)

# இணைப்பாட்சி என்கிற சமஷ்டி!

"சமஷ்டியா தனிநாடா" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் நவீன வரலாற்றுத்துறை விரிவுரையாளரான மு.திருநாவுக்கரசு அவர்களால் எழுதப்பட்ட நூல் இன்றைய காலகட்ட விவாதங்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும். 2004ஆம் ஆண்டு வெளியாகிய இந்த நூல் சமஷ்டி - தோற்றமும் வளர்ச்சியும், சமஷ்டி - ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும், சமஷ்டி யாப்புகள் - அமெரிக்க சுவிஸ் அனுபவங்கள், இலங்கையில் சமஷ்டிக் கொள்கை ஆகிய அத்தியாயங்களை உள்ளடக்கியிருக்கிறது. 234 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 2009ஆம் ஆண்டு அறிவு அமுது பதிப் பகத்தால் கிளிநொச் சியில் வெளியிடப் பட்டது. தீர்வு பற்றிய பேச்சுக்கள், கலந்து ரையாடல்கள் இடம் பெறும் இந்தக் காலத்தில் அதன் ஐந்தாம் அத்தி யாயத்தைச் செம்மண் ணில் வாசிக்கத் தருகிறோம்.




08

மு.திருநாவுக்கரசு

## இலங்கையில் சமஷ்டிக் கோரிக்கை

பண்டாரநாயக்கா ஐ.தே.க.வில் டி.எஸ்.சேனநாயக்காவுடன் இருந்தவர். ஐ.தே.க.வின் ஸ்தாபகத் தலைவர்களில் பண்டாரநாயக்காவும் ஒருவர். டி.எஸ்.சேனநாயக்கா ஒரு தீவிர வலதுசாரி என்பது பண்டாரநாயக்காவுக்குத் தெரியாத ஒன்றல்ல. அதேவேளை பிரித்தானிய இராணுவத் தளங்களை இலங்கையில் வைத்திருப்பதற்காக 1947ஆம் ஆண்டு பிரித்தானியருடன் டி.எஸ்.சேனநாயக்கா கைச்சாத்திட்;ட ஒப்பந்தங்கள் இரகசியமுமல்ல. இவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டுதான் டி.எஸ்.சேனநாயக்காவின் அமைச்சரவையில் பண்டாரநாயக்காவும் ஒரு முக்கிய அமைச்சராக இருந்தார்.

வெளிப்படையாக அனைவருக்கும் தெரிந்திருந்த இக்கொள்கை ரீதியான டி.எஸ்.சேனநாயக்காவின் நிலைப்பாட்டைப் பண்டாரநாயக்கா எதிர்த்திருக்கவில்லை. ஆனால் அவருக்கு ஏற்கனவே தெரிந்திருக்காத ஒரு விடயம் தெரிந்தபோதுதான் பண்டாரநாயக்கா டி.எஸ்.சேனநாயக்காவை எதிர்த்துப் போர்கொடி உயர்த்திப் புதுக்கட்சி அமைக்கப் புறப்பட்டார்.

அதாவது டி.எஸ்.சேனநாயக்காவுக்குப் பின்பு அரச கட்டிலுக்குரிய வாரிசு அவரது மகன் டட்லி சேனநாயக்காதான் என்ற இரகசிய ஏற்பாடுகள் தெரிய வந்ததும் டி.எஸ்.சேனநாயக்காவுக்கு அடுத்து இரண்டாம் நிலையிலிருந்த பண்டாரநாயக்கா சினங்கொண்டெழுந்தார். டி.எஸ்.சேனநாயக்கா எதிர்பாராத

# “நிலத்தில் கால் வைக்கப் பயமாக இருந்தது”



மொழியாக்கம்
கமலநாதன்

ஜயந்த சேனவிரத்னவும் ஊரக்க சேனவிரத்னவும் இரத்தினபுரியைப் பிறப்பிடமாகக் கொண்ட சகோதரர்கள். இவர்கள் இருவரும் இலங்கைப் படைப்பிரிவில் இணைந்து மேஜர் ஜெனரல் பதவி வகித்துள்ளார்கள். இவர்களின் தந்தை பிரித்தானிய றோயல் படைப்பிரிவில் வான் படை அதிகாரியாகப் பதவி வகித்துள்ளார். 1983இல் திருநெல்வேலியில் 13 படையினர் புலிகளால் கொல்லப்பட்டதும் அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலைகளுமே தாங்கள் படையில் சேரக் காரணமாக அமைந்தது என்கிறார்கள் இவர்கள். இவர்கள் இருவரும் இணைந்து வனச யூரியூப் தளத்துக்கு வழங்கிய செவ்வி வருமாறு...

**மேஜர் ஜெனரல் ஜயந்த சேனவிரத்ன**

நான் 1985இல் இலங்கைப் படையில் சேர்ந்தேன். ஆரம்பப் பயிற்சியை கொத்தலாவல படைப் பயிற்சி முகாமில் பெற்றேன். பின்னர் தியத்தலாவ படைப் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றேன். அதன் பின் சிறப்புப் பயிற்சிக்காகப் பாகிஸ்தானுக்குச் சென்றேன். இந்தப் பயிற்சிகள் அனைத்தும் எனது சகோதரரான ஊரக்க சேனவிரத்னவுக்கும் கிடைத்தன. நாம் இருவரும் ஒரே படையணியில் பணியாற்றியபோதிலும் நான் தாக்குதல் பிரிவிலும் ஊரக்க சேனவிரத்ன தொலைத் தொடர்புச் செய்திப் பரிமாற்றத் துறையிலும் பணியாற்றினோம். இருவரும் சிங்கப் படைப்பிரிவில் கடமையாற்றினோம்.

**வன்னி விக்கிரம தாக்குதல்**

மாங்குளத்திலிருந்த படையினரின் முகாமைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலே வன்னி விக்கிரம தாக்குதல் ஆகும். இந்தத் தாக்குதலை வவுனியவில் இருந்து மாங்குளம் நோக்கி ஆரம்பித்து வெற்றிகரமாக மேற்கொண்டுவிட்டு மீண்டும் வவுனியா நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தபோது ஓமந்தைப் பகுதியில் வைத்துப் புலிகள் விதமாகத் திடீரென இறந்தபோது இலங்கையின் மகா தேசாதிபதியாக இருந்தவர் சோல்பரி. இவரிற்கூடாகத்தான் பிரிட்டிஷ் அரசுடன் டி.எஸ். சேனநாயக்காவுக்கு பதவிநிலை பற்றிய இரகசிய ஒப்பந்தம் இருந்ததாகக் கருதப்படுகிறது. இதை மெய்ப்பிக்கும் வகையில் பின்பு நிகழ்வுகள் அமைந்தன. டி.எஸ்.சேனநாயக்கா இறந்தபோது சோல்பரிP விடுப்பில் (டநயஎந) லண்டனில் இருந்தார். சோல்பரி நாடு திரும்பும் வரை புதிய பிரதமருக்கான நியமனம் நிறுத்தி வைக்கப்பட்டதுடன் அவர் தனது விடுப்பை ரத்துச் செய்துவிட்டு இலங்கை திரும்பியதும் திரு.டட்லி சேனநாயக்காவைப் பிரதமராக நியமித்தார். அப்போதைய கட்சி நிலமையின்படி ஜோன் கொத்தலாவலையைத்தான் பிரதமராக சோல்பரி நியமித்திருக்க வேண்டும். ஆனால் மாறாக டட்லி சேனநாயக்காவை சோல்பரி பிரதமராக நியமித்தார்.

இவற்றால் ஆத்திரமும் விரக்தியுமடைந்த கொத்தலாவலை தனது பெயரைக் குறிப்பிடாது இதுபற்றி கைந்நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார் என்பது நாடறிந்த இரகசியம். இத்தகைய வாரிசுரிமை பற்றிய இரகசியத் திட்டங்கள் பண்டாரநாயக்காவுக்கு ஏற்கனவே தெரியவந்ததைத் தொடர்ந்து 1951ஆம் ஆண்டு அவர் ஐ.தே.க.வை விட்டு வெளியேறி சிறீலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தார். எனவே பதவி நோக்கந்தான் இதில் பண்டாரநாயக்காவை வழிநடத்திய காரணியே தவிர கொள்கையல்ல.

இப்போது பண்டாரநாயக்காவின் பிரதான இலட்சியம் சேனநாயக்கா வம்சத்தை வீழ்த்துவதும் தான் அரச கட்டிலேறுவதுந்தான். இதனால் சேனநாயக்காவை எதிர்க்கவல்ல அனைத்துச் சக்திகளையும் ஒன்று திரட்டினார். சேனநாயக்காவுக்கு எதிராகப் பேயுடனும் அவர் கூட்டுச்சேர்ந்தார். தீவிர மதவாதிகள், மலினமான உணர்வுகளைக் கிளற வல்ல இனவாதிகள், பிலிப் குணவர்த்தனா போன்ற மாக்சிச வாதிகள் மற்றும் இடதுசாரிகள், பௌத்த நிறுவனங்கள், கிறிஸ்தவ எதிர்ப்பு அமைப்புகள், நிலமானிய உறவு சார்ந்த அனைத்துப் பிற்போக்குச் சக்திகள், பிரித்தானிய எதிர்ப்பின் பெயரால் இந்தியா என்பவற்றுடன் எல்லாம் ஒரு விநோதமான கலவைக் கூட்டமைத்தார்.

(தொடரும்)

> " தாக்குதலின்போது நாம் சந்தித்த மிகப் பெரிய பிரச்சினை புலிகளால் வைக்கப்பட்ட மிதிவெடிகள் மீதான பயம் ஆகும். "

பின்புறமாகக் கலைத்து வந்து எம்மைத் தாக்கினார்கள். நாம் அதை எதிர்பார்க்கவில்லை. எனினும் திருப்பித் தாக்கினோம். இரவாகிவிட்டதால் ஓமந்தையிலேயே தங்கினோம். அந்த இடத்தில் தற்காலிக முகாம் ஒன்றை அமைத்தோம். தாக்குதல் இரவு 8 வரை தொடர்ந்தது. புலிகளின் சடலங்கள் பலவற்றை எடுத்தோம்.

**அக்குணு பகற தாக்குதல்**

1992இல் இலங்கைப் படைகளின் பல படையணிகள் இணைந்து அக்குணு பகற என்கிற தாக்குதல் நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்தோம். முல்லைத்தீவுக் காட்டுப்பகுதியில் புலிகளின் 14முகாம்கள் (பயிற்சி முகாம்கள், குண்டு தயாரிக்கும் இடங்கள் உட்பட) இருப்பதாகக் கிடைத்திருந்த வேவுத் தகவல்களுக்கு அமைய இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டிருந்தது. தாக்குதலின்போது நாம் சந்தித்த மிகப் பெரிய பிரச்சினை புலிகளால் வைக்கப்பட்ட மிதிவெடிகள் மீதான பயம் ஆகும். காட்டுக்குள் முன்னேறிச் செல்லும்போது புலிகள் மோட்டார் தாக்குதல்களையோ, வேறு தாக்குதல்களையோ இலக்கின்றிச் செய்வார்கள். அந்தச் சூழலில் உடனடியாக நிலையெடுக்கக் கூடிய பெரிய மரங்கள், விழுந்து கிடக்கும் மரங்கள், அருகில் காணப்படுகின்ற சிறிய மண்மேடுகள் ஆகியவற்றைத் தேடி ஓடி அவசரமாக நிலையெடுக்கும்போது அந்த இடங்களில் புலிகள் மிதிவெடிகளைப் புதைத்திருப்பார்கள். இதனால் பலர் கை, கால்களை இழந்தார்கள். பலர் சாவடைந்தார்கள். இந்த அவலத்தைத் தாண்டி முன்னேறிச் செல்வதற்கான மனப் பலத்தைச் சிப்பாய்கள் இழந்திருந்தனர். நாம் எதிர்பார்த்ததைவிட இந்தப் படை நடவடிக்கை மூலம் இரண்டு மாதங்கள் வரை தாமதித்தே முன்னேற முடிந்தது. நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கின்ற மிதிவெடிகள் எங்கே? எப்போது? எப்படி? வெடிக்கும் என்ற பயம் எல்லோருக்கும் இருந்தது. தாக்குதல் முடிந்த பின்பும் தாக்குதலில் ஈடுபட்ட சிப்பாய்களிடம் இந்தப் பயம் இருந்தது. கிணற்றில் குளிக்கப் போகும் போது கூட ஒருவர் பயன்படுத்திய அடிப்பாதையைப் பவித்து ஒருவர் பின் ஒருவராகச் செல்வதைப் பின்பற்றினார்கள்.

**கொக்குத் தொடுவாய் முகாம் அமைத்தல்**

நான் சந்தித்த தாக்குதலில் சற்று வித்தியாசமான தாக்குதல் கொக்குத் தொடுவாய் முகாம் அமைக்கும் தாக்குதல் ஆகும். காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் கடற்படைக் கப்பல்கள் போய்வருவதற்குப் புலிகள் மிகவும் அச்சுறுத்தலாக இருந்தனர். இந்தப் பகுதியில் கடற்புலிகளின் பலமான முகாம் ஒன்றிருந்தது. கொக்குளாய் கிராமத்துக்கு வடக்காகக் கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் நிரந்தரமாகப் படை முகாம் ஒன்றை அமைப்பதில் கவனம் செலுத்தினோம். அந்த முகாமை அமைக்கும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது. இந்தத் தாக்குதலை ஞானக புர படை முகாமிலிருந்து ஆரம்பித்தோம். அங்கிருந்து முன்னேறிச் சென்று நடத்தினோம். புலிகள் வடக்குப் பக்கத்தில் இருந்து கடுமையாகத் தாக்கியதால் எமது படையணிகள் இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டன. இந்தத் தாக்குதலைப் புலிகள் கோவில் பொயின்ரிலிருந்து நடத்தினார்கள். அந்த இடத்தில் ஒரு சிறிய கோவில் இருந்ததால் அதைக் கோவில் பொய்ன்ற் என்று அழைத்தோம். அந்த இடத்தைக் கைப்பற்றுவதே எமது நோக்கமாக இருந்தது. தொடர் தாக்குதலை நடத்தி ஒரு வாரத்தில் கோவில் பொய்ன்ரைக் கைப்பற்றி அங்கு நிரந்தர முகாம் ஒன்றை அமைத்தோம்.



**ஜெயசிக்குறு முன்னெடுப்பு**

1998 காலப்பகுதியில் யாழ்ப்பாணம் - வவுனியா முதன்மை வீதியில் புலிகளின் செயற்பாடு அதிகமாக இருந்தது. இந்தப் பாதையை விடுவிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட தாக்குதலே ஜெயசிக்குறு நடவடிக்கை. உலங்கு வானூர்தியில் துரப்புகளைக் கொண்டு சென்று குறிப்பிட்ட இடங்களில்இறக்கி அங்கிருக்கும் புலிகளின் முகாம்களைத் தாக்கினோம்.

(தொடரும்)

# ஏன்...?

# அப்படி...?

நட்சத்திரா

## பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்

43



பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்றொரு பழமொழி தமிழில் உண்டு. பாம்பு என்றால் நடுங்காதவர் இருக்க முடியாது என்பது உண்மைதான். ஏன் அப்படிப் பாம்பைக் கண்டால் பயப்பிடுகிறார்கள்...?

பாம்பு பற்றிய எவ்வித அனுபவமோ, அறிவோ இல்லாத சிறு பிள்ளைகள் கூடப் பாம்பைப் பார்த்துப் பயப்பிடுவதுண்டு. பாம்பு தீண்டி மனித இனம் அழிவைச் சந்திப்பதும், பாம்புக் கடி பாரதூரமான சம்பவமாக நடப்பதும் மிக நீண்ட காலமாகவே மனித வாழ்க்கையில் நடந்து வந்தது. இதனால் பாம்பு குறித்த அச்சம் மனிதர்களின் மரபணுவில் ஆழப் பதிந்துவிட்டது. அது சந்ததி சந்ததியாகக் கடத்தப்பட்டும் வருகிறது. இதனால்தான் ஒருபோதும் பாம்பைக் காணதவர்கள் கூட பாம்பைக் கண்டு பயப்பிடக் காரணமாகும். இந்தப் பயமே ஆரம்ப காலத்திலிருந்து பாம்பை வணங்கவும் காரணமாக இருந்தது.

நெருப்பு பாவனைக்கு வந்தபின்பே பாம்பின் தொல்லையிலிருந்து, பாம்பு மீதான பயத்திலிருந்து மனித இனம் மீளத் தொடங்கியது. பாம்புகள் அதிகமுள்ள கிராமங்களில் இரவில் உலாவுவோர் பந்தங்களை எரித்துக்கொண்டு செல்வார்கள். இதைவிடத் துளசி போன்ற மூலிகைச் செடிகளின் வாசனை பாம்புகளுக்கு ஒவ்வாமை என்பதை அறிந்து வீட்டைச் சுற்றித் துளசி போன்ற மூலிகை மரங்கள் சிலவற்றை நட்டு வளர்த்தார்கள். இவற்றைவிட கால்கள், கைகள் அற்ற பாம்பு வேகமாக ஊர்வதும், எப்போது? எப்படி? அது எந்தத் திசையில் செல்லும் என்பதை அதன் உடல் செயற்பாடுகளில் இருந்து முன்னுணர முடியாமலிருப்பதும், சத்தம் சந்தாடியின்றி அதன் வரவு இருப்பதும் எனப் பல காரணங்கள்கூட பாம்பு மீதான

பயத்தை மனிதர்களுக்குள் புகுத்தியி ருக்கிறது.

இவ்வாறாகப் பாம்பு பற்றிய பயம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஆதி கால வாழ்விலிருந்து இருந்து வருவ தால்தான் இத்தனை ஆண்டுகால முன்னேற்றங்களுக்குப் பின்பும் பாம் பைக் கண்டால் அனைவரும் நடுங்கி விடுகிறார்கள்.

# பெண் சுகம் நாடி வரும் வெளிநாட்டு அங்கிள்கள்...!



விதுரன்

தற்போது தமிழர் மத்தியில் புதிய விவகாரம் ஒன்று புரையோடத் தொடங்கியிருக்கிறது. காலப்போக்கில் அது புதிய கலாசாரமாக மாறி விடும் அபாயமும் இருக்கிறது. மிகப் பெரிய கலா சார சீரழிவை இது ஏற்படுத்தி வருகிறது. வெளி நாடுகளில் வாழும் தமிழர்கள் சிலர் விடுமுறை யைக் கழிப்பதற்காகத் தமது ஊர்களுக்கு வந்து தமது செல்வாக்கைப் பிரபல்யப்படுத்திப் பெண் களை வசீகரப்படுத்தியும், பெண்களை இணங்கச் செய்தும் பெண் சுகம் அனுபவிப்பதையும் பாலி யல் இச்சைகளைத் தீர்ப்பதையும் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இதற்கான அடிப்படைக் காரணமாக உள்ளூரவர்களின் பொருளாதாரப் பின்னடைவு இருக்கிறது. அதைப் பயன்படுத்தித் தமது பணச் செல்வாக்கை அந்த அங்கிள்கள் வாரி வழங்க அதற்குப் பெண்கள் சிலர் இணங்கிச் செல்கிறார்கள். இதனால் கிட்டத்தட்;ட ஓர் அங்கீகரிக்கப்பட்ட பரத்தையர் ஒழுக்க மாக இது மாறியிருக்கிறது. 1970, 80 களில் இங்கு வறு மையில் வாடிப் பின்னர் வெளிநாடு சென்று திரும் பிய வயோதிபர்களே இதன் முக்கிய புள்ளிகள். இப் போது ஊருக்கு வரும் அவர்கள் ஊரில் தம்மைக் கொடை வள்ளலாக வேறு காட்டியிருக்கின்றனர்.

**பண உதவிகளை வழங்கி இணங்கச் செய்யும் உத்தி**

உயர் ரக கைபேசிகள், கழுத்தில் தங்கச் சங்கிலி, கையில் கைச்சங்கிலி, விலையுயர்ந்த கடிகாரம், மோதிரங்கள், கறுப்புக் கண்ணாடி, அரைக்காற்சட்டை, சப்பாத்து என அளவுக்கதிக பெறுமதி கொண்ட சோடனைகளுடன் விடுமுறையைக் கழிப்பதற்காகத் தமது ஊருக்கு வரு கின்றனர் இந்த அங்கிள்கள். உறவுக்காரர்களின் வீடுக ளுக்குச் செல்லும் இந்த அங்கிள் உருவங்கள் அந்தக் குடும்பத்தில் பெண் பிள்ளைகள் இருப்பதை மேப்பம் பிடித்துவிடுகிறார்கள். அவ்வாறு தமக்குப் பிடித்தமான பருவத்தில் பெண்கள் இருந்துவிட்டால், அந்தக் குடும் பத்துப் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், தாய், தந்தை, குடும்பத்தினருக்குப் பணம், வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்த சாராயம், இனிப்புகள், உடுப்புகள் என அள்ளிக் கொடுப்பார்கள். அத்துடன் அந்த வீட்டுக்குரிய வேறு தேவைகளையும் நிவர்த்தி செய்துகொடுப்பார்கள். தமக்குப் பணம் மற்றும் வௌவேறு வகையான உதவி களை முன்வந்து செய்வதால் அங்கிள்களின் விருப்பம் மற்றும் தேவைகளை நிறைவேற்றுவதில் இணங்கிச் செல்லவேண்டிய நிலை அங்கிள்கள் குறிவைக்கும் பெண்களுக்கு ஏற்படுகிறது.

**சுற்றுலா என்ற பெயரில் சுகம்**

"ஓல் சிலேன் ட்றிப்" என்ற பெயரில் கண்டி, நுவரே லியா, கதிர்காமம், கொழும்பு என்று தமது செலவில் குடும்பங்களை அழைத்துச் சென்று தமது பாலியல் கைவரிசையை இந்த அங்கிள்கள் காட்டுகின்றனர். அத் தகைய சந்தர்ப்பங்களில் பெண்களுடன் இணைந்தும் நெருக்கமாகவும் கைபேசிகளில் ஒளிப்படம் எடுக்க அங்கிள்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இவர்களின் தந்திரம் அறியாமல் பழகி விடயம் தெரியவந்ததும் விலகிச்செல்லும் கட்டத்தில் இத்தகைய ஒளிப்படங்களை வைத்து அந்தப் பெண்களை மிரட்டவும் செய்கிறார்கள். இந்த வயதான வெளிநாட்டவர்களால் பெண்கள் பலர் சீரழிக்கப்பட்டுள்ளனர். அதன் பின்னர் திருமணம் ஆகாத பெண்களைத் தமது பாலியல் இச்சைக்குப் பயன்படுத்து

கின்றனர். இவர்களை மீறித் திருமணம் செய்து கொள்ளும் பெண்களின் குடும்பங்களைப் பிரிக்கவும் விரிசலை ஏற்படுத்தவும் தம்முடன் எடுத்த ஒளிப்படங்

# வெளிநாட்டுக் கில்லாடிகள் எந்த உதவி யைச் செய்தாலும் அதில் ஏதோ ஓர் உள்நோக்கம் இருக்கவே செய்யும்



களைப் பயன்படுத்துகின்றனர். பல குடும்பங்களைப் பிரித்து அநாதரவான நிலையிலுள்ள பெண்களை நிரந்தர வைப்பாட்டிகளாக இந்த அங்கிள்கள் வைத்துமுள் ளனர்.

இத்தகைய வெளிநாட்டுக் கில்லாடிகள் எந்த உதவி யைச் செய்தாலும் அதில் ஏதோ ஓர் உள்நோக்கம் இருக்



கவே செய்யும்.

இந்தப் புதிய கலாசாரத்தால் உள்ளூரில் குடும்பங்கள் பல பிரிந்துள்ளன. பல பெண்கள் தவறான முடிவெடுத்து உயிர் மாய்க்கிறார்கள். இதைச் சட்டத்தாலோ ஊரவர் களாலோ கட்டுப்படுத்த முடியாத நிலையே காணப்படு கிறது.

**வன்முறைகள்**

வெளிநாட்டு அங்கிள்களின் பணத்தால் பெரிய வீடுகள், மோட்டார் சைக்கிள்கள், கார் எனப் பெற்று ஆடம்பர வாழ்க்கையையும் பல குடும்பங்கள் தேடிக் கொள்கின்றன. இதற்கு முரண்பட்டு வெளிநாட்டு அங் கிள்களின் பாலியல் சேட்டைகள் பிடிபட்டு அங்கிள்மாரை காவல்துறையில், நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய சம் பவங்களும் நடந்துள்ளன. அங்கிள்களின் இந்த விட யத்தில் பிரச்சினைப்படுபவர்களைக் குறிவைத்து இளை ஞர் குழுக்களை ஏவி குறிப்பிட்ட வீட்டை அடித்து நொருக்குவது, மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி களுக்குத் தீ வைப்பது ஆகிய வன்முறைகள் தூண்டி விடப்படுகின்றன. இவ்வாறான சம்பவங்களைச் செய்த இளைஞர்களை விசாரித்தால் வெளிநாடுகளில் இருந்து இந்தக் கும்பல்களுக்குப் பணம் அனுப்பிய அங்கிள்களின் விவரம் தெரியவரும். இது இன்னோர் பக்க சீரழிவைச் சமூகத்தில் உருவாக்கியிருக்கிறது. இந்த அங்கிள்கள் விடுறைக்காக வந்து ஊரில் நிற்கும்போது ஊரிலுள் மோசமான நபர்களுடன் கூட்டுச் சேர்ந்து மது அருந்து வது, கடற்கரை உல்லாசம் எனச் செலவழித்துத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதால் ஊரவர்கள் தன்னு டன் முரண்படாதவாறு பாதுகாத்துக்கொள்கிறார்கள். அத்துடன் கோயில்கள், பாடசாலைகள் எனப் பண உதவிகள் கட்டடங்களை வழங்குவதால் கிராமத்தினரும் இவருக்கு எதிராகக் கதைக்காமல் கண்டும் காணாமல் விடுகின்றனர். இந்த வெளிநாட்டு அங்கிள்கள் ஊர் தோறும் தற்போது பெருகி வருவதால் அனைத்து ஊர வர்களும் இது விடயத்தில் இனிக் கவனம் கொள்ளவேண் டும்.

## இந்த வாரச் சொல்

### மினக்கெட்டு

மினக்கெட்டு என்பது வினைச் சொல்லாக யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் பயன்பாட்டிலுள்ளது. பிரயத்தனப்பட்டு அல்லது அதிக கவனமெடுத்துச் செய்தல், ஒரு விடயத்துக்காகத் தனது நேரத்தை இன்னொருவருக்காகச் செலவிடுதல், ஒரு விடயத்துக்காக அதிக சிரத்தையுடன் செயலாற்றுதல் ஆகிய அர்த்தங்களில் இது பேசப்படுகிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் பாவிக்கப்படுகிறது.

ஒரு பாடத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் ஒருவர் வெகு தூரத்திலிருந்து வகுப்பறைக்கு வந்தும்கூட உரிய நேரத்தில் மாணவர்கள் அங்கு வருகைதராதபோது, 'நான் உங்களுக்கென்று மினக்கெட்டு இவ்வளவு தூரம் வந்திருக்கிறன். நீங்கள் வரவில்லை' என்று கூறுவதுண்டு.

இதைவிட, 'அவன் மினக்கெட்டு அந்தச் சிற்ப வேலையைச் செய்தவன்'

'அவன் கன நேரம் மினக்கெட்டுத்தான் வாட்டப்பம்மைத் திருத்தினவன்'

'அவன் கனடாவிலிருந்து மினக்கெட்டு வந்தவன்'

'அவன் தோட்டத்தோட மினக்கெட்டதால இந்த முறை நல்ல விளைச்சல் கிடைச்சிருக்கு'

'அவன் மினக்கெட்டுக் கல்லறுத்து வைக்க நாய் உளக்கிப் பழுதாக்கிப்போட்டுது'

'நான் இருக்கிற வேலை எல்லாத்தையும் விட்டுப்போட்டு மினக்கெட்டு இங்க வந்திருக்கிறன். இண்டைக்கே என்ர காச வைக்கவேணும்' என்பவை சில உதாரணங்கள்.

# தமிழ் அரசுக் கட்சியிலிருந்து வேறுபடுமா ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு...?

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்காக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியானது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக உருமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. சுதந்திரத்துக்குப் பின்பான 70ஆண்டு காலமாகத் தமிழ் மக்களின் உரிமை பற்றிப் பேசி வருகின்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இதுவரை காலமும் பல தவறுகளை விட்டிருக்கிறது. அதன் இன்றைய வீழ்ச்சிக்கு அந்தத் தவறுகளே காரணங்கள் என்றாகி விட்ட நிலையில் தற்போது புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பழைய தமிழ் அரசுக் கட்சியைப் போலல்லாமல் வேறுபட்ட வகையில் தமிழ் மக்களின் பிரச்சினையை அணுகுமா...? அல்லது தமிழ் அரசுக் கட்சிபோலவே குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுமா? என்பது தெரியவில்லை.

சம்பந்தன், விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சிறிகாந்தா எனப் பல்வேறு தரப்புகளும் பிரிந்து நின்று வௌவேறு வகையான தமிழ்த் தேசியம் பற்றிப் பேசி வருகின்றனர். இவர்கள் பேசும், செய்யும் விடயங்கள் மக்கள் மயப்பட்டவையாக இருந்தால் இந்தத் தமிழ்த் தேசியவாதிகள் மத்தியில் இவ்வளவு பிரிவுகள் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. தனியாள் போட்டியும், தேவையும், தன்முனைப்புமோ இவர்களின் தமிழ்த் தேசியத்தில் இழையோடியுள்ளது.

#### வேட்பாளர்களைத் தெரிவு செய்தல்

ஜனநாகயத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது வடக்குக் கிழக்கில் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டிய தேவையுள்ளது. ஆயுதம் தாங்கிய அமைப்புகளில் இருந்து இந்தக் கட்சியில் இணைந்தோரும் உள்ளனர். புதிய வேட்பாளர்கள் தூயவர்களாக இருப்பது அவசியம். எத்தகைய கூட்டைப்பற்றிப் பேசினாலும் அவர்கள் அரசியலுக்குள் நுழைக்கும் ஒருவரை தனி நபராகவே வாக்களிக்கும் மக்கள் எடைபோடுவார்கள். வேட்பாளர் பட்டியலை ஒவ்வொரு கட்சியும் சுய விமர்சனத்துக்கு உட்படுத்தி வெளியிடுவதே சரியானது.

#### சமூகம் சார் வேட்பாளர்கள்

தமிழ் அரசுக் கட்சி இதுவரை காலமும் இழைத்த மிகப் பெரிய தவறு சமூகம் சார்ந்த வகையில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யாததும் சமூகம் சார் நபர்களைத் தேசியப் பட்டியலில் இணைக்காததும் ஆகும். அத்தோடு சமூகரீதியான வேட்பாளர் தெரிவு இடம்பெறாவிட்டால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டாலும் எதையும் சாதிக்க முடியாது போய்விடும். நடக்கவிருக்கும் தேர்தலில் கட்சிகள் பிரிந்து களமிறங்குவதால் எந்தக் கட்சியும் அதிக பெரும்பான்மை பெற முடியாத நிலை காணப்படுகிறது. இந்த நிலையில் தேர்தலில் வெள;வேறு தரப்பினரும் வெல்லும்போது தற்போதுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் படுகின்ற குழப்பத்தைவிட பல மட ங்கு குழப்பத்தையே சந்திக்க நேரிடும்.

# அதமம் எண்டிறது இதுதானோ?



கதிரேசன் காத்தவராயன்

'பட்டிப்பொங்கலுக்கு வந்திடுங்கோ' எண்டு வல்லியம்மான் காணுகிற இடமெல்லாம் சொன்னவரெண்ட நினைப்பு வர அங்கை போனன். அம்மான் குடும்பமே நிண்டு பொங்கினதைக் காண சந்தோசமாயிருந்துது. தம்பரும் நிண்டார். என்னைக் கண்ட வல்லியம்மான் 'வாடாப்பா கதிரேசு.. மறந்து போயிடுவியோ எண்டு நினைச்சன்... மற்றவை எங்கை வருவினமல்லோ?' எண்டார்.

'அம்மானின்ரை பொங்கல் வராமலுக்கோ.... பேந்து றோட்டிலை தெருவிலை தப்பேலுமோ?'' எண்டன். கெக்கட்ட மிட்டுச் சிரிச்சார். 'பங்கார் கதிரேசு கனகனும் சம்பனும் வாறாங்கள்... வாங்கோடாப்பா'எண்டு உற்சாகத்தைக் கூட்டினார். எங்களை அதிலை சாக்குகளை விரிச்சு இருத்தினார். இருந்து என்ன! கச்சேரிதானே?

'எப்பிடியப்பா பொங்கலுகள்?' எண்டு நான்தான் தொடக்கினன். 'பொங்கலில்லோ... செழிப்புத்தான்... நாட்டிலை பொருளாதாரம் கஸ்டமான நிலைமையெண்டால் நம்புகிற மாதிரியோ கிடக்குது?' எண்டார் கனகர். 'எடேயப்பா கஸ்ர மெண்டது தமிழனுக்குப் புதிசோடாப்பா? 2009-தையும் விசுவமடுவிலை பொங்கினனானெண்டாப் பாருங்கோவன்... எங்கடை விசயங்களை விடேலுமோ?' எண்டார் உழவு சோடியளுக்கு கொம்புக்கு சந்தனம் பூசினபடியே.

'அம்மான் என்ரை பேரன் என்ன கேட்டவன் தெரியுமே? உழுகிறது ரக்டர்தானே... அதுக்கல்லோ பொங்கவேணுமெண்டு..' கனகர் சொல்ல எல்லாரும் சிரிச்சம். 'ம்ம்... எனி மேல் காலம் உப்பிடித்தான் கூத்தடிக்கப்போகுதுகள்... அதுகளுக்கு குடும்பத்தோடை கூடிச்செய்யிற இப்பிடியான விசயங்களைக் காட்டுறமோ? நேற்றும் பாத்தன் உங்கை ரியூசனிலை தானே பெடி பெட்டையள் நிண்டுதுகள்... கோதாரி விழுவார்' எண்டு கொதிச்சார் வல்லியம்மான்.

'அதம்மான் செய்தொழிலே தெய்வம்...' எண்டு சம்பர் தொடங்கினதை முடிக்கயில்லை 'ரியூட்டறிக்காறனுக்கல்லோ அது. படிக்கிற பெடி பெட்டையளுக்கு வீடுவாசல் குடும்பம் சொந்த பந்தமெண்டு இல்லையோ... பேக்கதையல்லே பறையிறாய்' எண்டு சீறினார் வல்லியம்மான். 'அம்மான் சொல்லுறது தான் நியாயம்... அங்கை நிண்டு பொங்கிறதைவிட

சமூகவலைத்தளக் கருத்துகள்

2020தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் பலர் தோல்வியுற்றனர். இதற்குக் காரணம் சமூக வலைத்தளங்களின் செல்வாக்கே. சமூக வலைத்தளங்களில் சாதாரண மக்கள்கூட தமது கருத்துகளைப் பரப்புவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அவை பொதுவெளியில் பெருந் தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன. இது பத்திரிகைகளுக்குக் கூட இல்லாத மக்கள் பலமாகும். வேட்பாளர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அவரது தனி நபர் ஒழுக்கம், கடந்த காலங்களில் அவரது நடவடிக்கைகள், பேச்சுகள் ஆகிய விடயங்கள் மிக வேகமாக வெளிக்கொணரப்படுவதால் தேர்தலுக்கு முன்னரே பிழையானவர்கள் மக்கள் மத்தியில் தோற்றுப்போக வாய்ப்புண்டு.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை தீதும் நன்றும் அவர்களின் கைகளிலேயே உள்ளன. பிழையான வேட்பாளர் தெரிவை மேற்கொண்டுவிட்டு பின்னர் மக்களைக் குறைகூறுவதில் பலனில்லை.

**தென்னிலங்கைக் கட்சிகள்**

வடக்கு கிழக்கில் ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பொது ஜன பெரமுன ஆகியன தமது வேட்பாளர்களை நிறுத்தவிருக்கின்றன. அவர்களின் வேட்பாளர்கள் தனி மனிதர்களாகவும் திறமையானவர்களாகவும் சமூக அக்கறையுள்ளவர்களாகவும் இருக்கும் பட்சத்தில் அவர்களின் வெற்றி உறுதி செய்யப்படும். இது தமிழ் அரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பெரிய பின்னடைவைக் கொடுக்கும்.

ஒரு சிறிய இனம் பல்வேறு பக்கங்களிலும் சிதறிப் பிரிந்து அரசியல் செய்ய முற்படும் தற்போதைய சூழலில் தந்தை பெரியார் கூறியது போல பதவி ஆசையில் மிதக்கின்றவர்கள் எப்படிப்பட்ட அற்ப இழிவான அயோக்கியத்தனமான காரியங்களைச் செய்தும் வெற்றிபெறவே பார்ப்பார்கள். அவர்களிடம் சுய நலம் தவிர மனிதப் பற்றோ நாட்டுப்பற்றோ சிறிதளவும் காணமுடியாது - என்ற கருத்துக்குத் தகுதியுடையவர்கள் ஒருகணம் சிந்தித்துத் தேர்தலில் களமிறங்குவது நல்லது.

வெடியளைக் கொழுத்தி றோட்டுக்கு எறிஞ்சதுதான் மிச்சம்... முறைதலையோ பண்பாடோ ஒண்டுமில்லை' எண்டார் கனகர்.

அந்த நேரம் முருகேசர் வந்தபடியே 'பண்பாடோ அப்பிடியெண்டால் என்னப்பா அது?' எண்டார். 'அதுதான்ரா முருகேசு வா வா.. அப்பிடிக் கேள்...' எண்டு வல்லியம்மான் சத்தம் போட்டார். 'கொழுத்தியெறிஞ்சு காசைக் கரியாக்கின காசு காணும் இலங்கையின்ரை கடனுக்கு வட்டிகட்ட... அதுக்கை பார் எங்கடை தமிழன்ரை காசு முழுதும் ஆரிட்டைப் போட்டுதெண்டு?'எண்டு முருகேசர் கொதிச்சார்.

'உண்மைதான் முருகேசு... பொங்கல்ச் சாமானுகளை வாங்க வழியில்லை... விலையள் அப்பிடி? அதுக்கை இதுகுமொரு கூத்து' எண்டு நான் சொல்ல 'அது... பொங்கல் பொதிகுடக் கிறதுமல்லே இப்ப பெரிய தொழிலாப் போயிருக்கு... சில குடும்பங்களுக்கு. அதான் இதானெண்டு மூண்டு நாலு செற்றாயல்லே அடுப்பையும் நெருப்பையும் விடப் பொங்கல்ச் சாமானுகள் கிடைச்சிருக்கு...' எண்டார் முருகேசர்.

'எனக்கே ரண்டு செற் கிடைச்சதல்லே... மனிசிக்கு ஒண்டு மேளுக்கு ஒண்டு' எண்டார் வடை சுட்டுக் கொண்டிருந்த வல்லியம்மானின்ரை மருமேன். 'ஏனப்பா எனக்கும் ஒண்டல்லே? மொத்தமாய் மூண்டு... எங்களுக்கென்ன கோதாரியே?' எண்டு சிரிச்சார் வல்லியம்மான். 'அதுக்கை பாத்தியளே ஏன் பொங்கிறமெண்டே தெரியாமலுக்கல்லே பொங்கிறம்.... கோயிலுக்கும் தைப் பொங்கலுக்கும் வித்தியாசம் தெரியேல்லை...' எண்டு முருகேசர் எரிச்சலோடை சொன்னார்.

'அரிசி அவிஞ்சுதோ இல்லையோ வேட்டிக்காறர் அவிஞ்சு போச்சினம்... பொங்கல் திண்ட வாயாலை ஏதாலும் விழும் எண்டு வாய் பாத்தவை... ஒண்டும் விழயில்லை' எண்டு சிரிச்சார் கனகர். 'வாய்பாத்து ஏமாறுறது உவைக்குப் புதிசோ? இல்லையல்லே?' எண்டார் பானையைத் துளாவினபடியே அம்மான்.

'இந்தமுறை பொங்கல் ஒரு விதத்திலை சீயெண்டமாதிரியல்லே போச்சுது?' எண்டார் சம்பர். 'இந்த முறை தைப் பொங்கல் இல்லை..அத மப் பொங்கல். அம்மான் படையலுக்கு ஆயித்தமாகிறார். வாங்கோ..' எண்டு நான் எழும்பிவிட்டன்.

# மனவெளி

## 92

### ஐயங்கொண்டான் சுவாமிகள்

மனமானது இலக்கற்றதொரு வெறுமைக்குள்ளோ இதுதான் இலக்கென்று மாயப் புள்ளிக்குள்ளோ அடைபட்டுக்கொள்கிறது. தானே வனைந்த வலையை தன்னிடம் ஏற்கனவே இருக்கிற கற்பிதங்களுடன் சேர்த்துச் சிக்கலாக்கி அதற்குள் தானே மாட்டிக்கொண்டு தன்னை வலிந்து சிறைக்குள் அடைத்துக்கொள்கிறது. உலக யதார்த்தம் தூரப்படுத்தப்பட்ட ஒரு மாய உலகைக் கனவு காண்கிறது. அதுவே உண்மையென வாழத் தொடங்குகிறது.

மாய உலகையே யதார்த்தமானதாகக் கொள்வதால் தன்னைப் பிறரிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கத் தொடங்குகிறது. இவ்வியல்பானது அன்னியமாதலை தனது சூழலில் இயல்பாகச் செய்துகொள்கிறது. பிறரை ஏற்றுக்கொள்வதற்கப்பால் ஐயம் கொள்ளத்தொடங்குகிறது. தனக்கெதுவுமே தெரியாதென்கிற எண்ணமானது மேலோங்குகிறபோது தாழ்வுச் சிக்கலில் அகப்பட்டுக் கொள்கிறது. தெரியாததை அறிந்துகொள்ள காலம் கடந்துவிட்டது, இனி அறிந்தும் என்னதான் ஆகப்போகிறதென்கிற ஒரு விரக்தி எழுந்துகொள்ளும் சந்தர்ப்பமே அதிகமாக உள்ளது.


தனக்கே எல்லாம் தெரியும் என்று எண்ணுகிறபோது பிறரைப் பரிகசிக்கத்தொடங்குகிறது. எல்லாமே தெரியும் என்கிற எண்ணமானது எதனையும் அறிந்துகொள்வதற்கும் அறிய முயல்வதற்கும் பெருந் தடையாகத் தானாகவே உருவாகிக்கொள்கிறது. இது ஒருவிதமான முடக்கத்திற்கு எம்மையறியாமலேயே இட்டுச்செல்கிறது. இதனை நாம் உணரத் தொடங்கும்போது காலம் கடந்து போய்விடுகிறது.

ஆக இரண்டுமே எம்மை முடக்கி விடுகின்றன. இந்த யதார்த்தத்தை நாம் உணர்ந்துகொள்ளத் தவறுவதும் தவிர்ப்பதுமே அதிகமதிகம் தொடர்கிறது. இவையிரண்டுமே அடுத்து என்ன? என்கிற எதிர்பார்ப்பைத் தவிர்த்து விடுகின்றன. நாம் அடையவேண்டும் என்கிற இலக்கை சரிவர அடைய இயலாதுபோய்விடுகிறது. மனம் அதற்காகவும் ஏங்கி தன்னிலையிழக்கத் தொடங்குகிறது. ஏன் குறித்த இலக்கை அடையத் தவறினேன்? என்பதனை (முழுமையாக அல்லது பகுதியளவாக) தனக்கு வெளியேயான ஒரு தளத்தில் தேடுகிறது.


குறித்த தளமானது யதார்த்தத் தளமாக அல்லாது அனேகமாக கற்பிதங்களாலான தளமாகவே அமைந்துகொள்கிறது. இது ஐதீகங்களாலானதாகவோ மனச் சேகரிப்பிலிருக்கிறவையாகவோ இருக்கலாம். இவ்வாறான தளங்கள் நிச்சயமாக தொட்டுணரப்பட

*சமையல் சமையல்*





# மரவள்ளிக் கஞ்சி



மரவள்ளிக் கிழங்கு நம் உணவில் ஒன்றித்த ஒன்று. மரவள்ளிக் கிழங்கை அவித்துச் செத்தல் மிளகாய்ச் சம்பலுடன் சேர்த்து உண்ணும் ருசி தனியானது. மரவள்ளிக் கிழங்கில் பாற்கறி சமைக்க முடியும். மிளகாய்த்தூள் சேர்த்துச் சற்று உறைப்பான கறியாக்கியும் ருசிக்கலாம். இவ்வாறாகப் பல வழிகளிலும் மரவள்ளிக் கிழங்கை ருசிக்கும் வழக்கம் இருக்கிறது. அவற்றில் ஒன்றுதான் மரவள்ளிக் கிழங்குக் கஞ்சியும். பாற் கஞ்சி என்றும்கூட இதை அழைக்கிறார்கள். மரவள்ளிக் கிழங்கும் தேங்காய்ப்பாலும் சேர்ந்து இனிப்பாக இருப்பதால் பாற்கஞ்சி என்று அழைக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கலாம். இதை ஆக்குவதும் சுலபம். அதிக பொருள்களும் தேவையில்லை. அத்தகைய பாற்கஞ்சியை ஆக்குவது எப்படி என்று இந்த வாரம் பார்ப்போம்.

**தேவையான பொருள்கள்**

மரவள்ளிக் கிழங்கு - 1கிலோ
தேங்காய்ப்பால் - 3கப்
சீனி - 200கிராம்
உப்பு - சிறிதளவு

**எப்படிச் செய்வது...?**

முதலில் மரவள்ளிக் கிழங்கைச் சுத்தப்படுத்தித் துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவேண்டும். சட்டி ஒன்றுக்குள் நீர் விட்டுக் கிழங்குத் துண்டுகளைப் போட்டு அவற்றை அவித்துக்கொள்ளவேண்டும். அவிந்து வந்ததும் சிறிதளவு உப்புப் போட்டுவிட்டுத் தேங்காய்ப்பால் சேர்த்து அவிந்த கிழங்குத் துண்டுகளை அகப்பையால் மசித்துக் கொள்ளவேண்டும். மசித்ததும் சீனி சேர்த்துக் கிளறவேண்டும். உப்பின் சுவையை அறிந்து தேவைக்கேற்ப உப்புச் சேர்க்கலாம். பால் வாசனை போனபின்னர் இறக்கிச் சுடச் சுடப் பாற்கஞ்சியை ருசித்துப் பாருங்கள். மரவள்ளிக் கிழங்குக் கஞ்சி நாவில் தெவிட்டும்.

முடியாதனவாகவே அமைகின்றன. இவை எமது அலைகிற மனத்தினது உருவாக்கமாகவோ யாரோ உருவாக்கியவற்றினது பதிவுகளாகவோதான் இருக்கின்றன. மனமே முழுதுமாக இருக்கிறது.

மனம் ஒன்றை உருவாக்காதிருந்தால் யதார்த்த களத்தை பகுத்தாராய்ந்திருந்தால் தன்னிடமுள்ள குறைவுகளையும் நிறைவுகளையும் உணர்ந்துகொள்ள முடிந்திருக்கும். அதுதான் நடப்பதில்லை. நடக்க எமது மனம் இடந்தருவதில்லை என்பதுதான் யதார்த்தம். யதார்த்தம் எங்கோ தூர இருக்க அலைந்து கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தகொள்ள முயல வேண்டும். அதைச் செய்கிறோமா?

மனமானது சார்புகளற்று இயங்கினாலேயே உணர்ந்தகொள்ள முடியும் என்று கூறப்படுகிறது. சார்பின்மை என்கிற ஒன்று உள்ளதா? என்கிற வினா எழுகிறதா? எழ வேண்டும். ஒரு செயலானது எப்போதுமே ஏதாவது ஒன்றையோ பலவற்றையோ சார்ந்தே இருக்கிறது. அப்படித்தான் இருக்கவேண்டும்.

சார் நிலையென்பது தவிர்க்கப்படவே முடியாதது. மாறிக்கொண்டிருத்தல் என்கிற நிலை இருந்தாலும் கருத்துருவாக்கமாக அல்லது கற்பனையாக உள்ளதெனினும் தளம் பலற்றுத் தீர்க்கமானதாகத் தொடர முடிகிறதா? கருத்து மாறுதல் என்றொன்று இருக்கும்போது செயல் மாறுதல் என்பது இருந்தேயாகும். கருத்துத்தான் செயலைத் தீர்மானிக்கிறது. செயலில் ஏற்படுகிற தடுமாற்றம் கருத்துத் தடுமாற்றத்திலிருந்தே உருவாகிறது.

இங்கேதான் சார்பு என்பது இல்லாமலிருப்பது செயலொன்றின் பெறுபேற்றில் உச்சச் செல்வாக்கைச் செலுத்தவதை அவதானிக்க முடியும். சார்பற்றிருத்தல் என்பது செயலற்றிருத்தல் அல்லது அடைவை எட்டாதிருத்தல் என்பதாகவே கவனத்திலெடுக்கப்பட வேண்டியதாக உள்ளது. செயலின் விளைவு எட்டப்படவில்லையெனில் சார்பு நிலை முயற்சி இடம்பெறத் தவறியுள்ளதென்பதே யதார்த்தமானது.

சார்பு நிலை என்பது என்ன? எதனைச் சார்வது? எப்படிச் சார்வது? என நீளமான வினாக்கள் எழ வேண்டும். எழுகிறதா? சிந்திப்போம்.

வாசுதேவன்

# உன் வீடு

எனக்குத் தெரியும்
உனக்கொரு வீடு இருக்கிறது

அது
நீயே நீ
உனக்கே உனக்காக
கட்டிக்கொண்டது

வரைபடங்கள் வரையவுமில்லை
அனுமதிகள் பெறவுமில்லை
உன் சவுகரியங்களால் வனையப்பட்டது

உன் நோவுகள் போக்கும்
தானியங்கி ஒத்தடங்கள் அங்குண்டு
உன் கவலைகளை ஐதாக்கும்
தைலம் சுரக்கும்
தாவர இலைகள் உண்டு
உன் மனதின்
தட்ப வெப்பங்களுக்கேற்ப
தன்னை இயக்கும் குளிரூட்டி அது

உன் எண்ணத்தைப் புரிந்துகொண்டு
தன்னைத் தானே
உருமாற்றிக் கொண்டிருக்கும்

அங்கு ஓர்
உயிருள்ள நிழல் உண்டு
நீ
நினைப்பதுபோலெல்லாம்
மாறும் நிழல்

யாருமே வந்துவிட முடியாத
கொளுத்த தனிமை நிறைந்திருக்கும்
இருண்ட உன் அறைக்குள்
நீ புசிக்கிறாய்

உலகிலேயே
அந்த வீடுதான்
மிகப் பத்திரமானது உனக்கு

எனக்கும் தெரியும்
நீ
அங்குதான் இருக்கிறாய்
ஆனால்,
நீ கொடுக்கும்
முகவரியில் இருக்கிறாய் என்று
நம்பிக்கொண்டிருக்கிறது
இந்த உலகம்



சினிமா




# வால்டர் வீரய்யா

## வழக்கமான மசாலா!

துரோகத்தால் வீழ்த்தப்பட்ட காவலரின் நேர்மையை உலகறியச் செய்ய வீரய்யா எடுக்கும் வீர தீர சாகசங்களின் அவதாரமே 'வால்டர் வீரய்யா' திரைப்படம்.

பன்னாட்டுக் காவல்துறையால் தேடப்படும் சாலமன் சீஸர் (பாபி சிம்ஹா) இந்திய 'ரோ' உளவுத் துறையால் கைது செய்யப்பட்டுத் தனி விமானத்தில் அழைத்துச் செல்லப்படுகிறார். அப்போது வழியில் வானூர்தி கோளாறாகி நின்றுவிட, காவல் நிலையம் ஒன்றில் தற்காலிகமாக ஓரிரவு மட்டும் அடைத்து வைக்கப்படுகிறார். பின்னர், அங்கிருக்கும் காவலர்களைக் கொன்றுவிட்டு மலேசியா தப்பிச்செல்லும் சாலமனை பழி தீர்க்க, வால்டர் வீரய்யாவின் (சிரஞ்சீவி) உதவியை நாடுகிறார் காவல் ஆய்வாளர் ஒருவர்.

இறுதியில் மலேசியா செல்லும் வால்டர் வீரய்யா, சாலமன் சீஸரை கண்டறிந்து பழிதீர்த்தாரா? இல்லையா? என்பதுடன் சில பின்னணிக் கதைகள், பல திருப்பங்களைக் கலந்து சொல்லியிருக்கும் படம்தான் 'வால்டர் வீரய்யா'.

'கடலோட அரசன்', 'வங்காள விரிகுடாவின் தகப்பன்' என பில்டப்புகளால் ஹைப் ஏற, கொந்தளிக்கும் ஆழ்கடலில் கொட்டும் மழையில் பீடியும், லுங்கியுமாய் 'மாஸ்' என்ட்ரி கொடுக்கிறார் சிரஞ்சீவி. கண்ணைப் பறிக்கும் கலர்களில் சட்டை, அதற்கேற்ற லுங்கி, கூடவே ஒரு கூலிங் க்ளாஸ், ரசிக்கவைக்கும் உடல்மொழி, கிச்சுகிச்சு மூட்டும் ஒன்லைன் காமெடிகளில் ஈர்க்கும் சிரஞ்சீவியின் நடிப்பு அவரது ரசிகர்களுக்கு உண்மையில் விருந்து.

அவருக்கு இணையாகத் திரையைப் பகிர்ந்துகொள்ளாவிட்டாலும் இறுக்கமான மற்றும் அழுத்தமான கதாபாத்திரத்தாலும், இறுதியில் சில உணர்ச்சிகரமான நடிப்பில் ஈர்க்கிறார் ரவி தேஜா. காதலுக்காகவும், சீண்டல்களுக்காகவும், பாடல்களுக்காகவும் எழுதப்பட்ட கதாபாத்திரமாக ஸ்ருதிஹாசன் வந்தாலும், சில ஆறுதல் அடிதடிக் காட்சிகளில் கவனம் பெறுகிறார் கேத்ரின் தெரசாவுக்கு பெரிய அளவில் வேலையில்லை.

வில்லனாக பாபிசிம்ஹா நடிப்பில் பிய்த்து உதறுகின்றார். பிரகாஷ்ராஜ் தனக்கு பழக்கப்பட்ட வில்லன் ஏரியாவில் தூசி பறக்க களமாடுகிறார். வலுவாக எழுதப்பட்ட அவரது கதாபாத்திரம் இறுதியில் நீர்த்துப் போகிறது. சத்யராஜ், நாசர் உள்ளிட்ட நடிகர்கள் கதாபாத்திரத்திற்கு தேவையான நடிப்பை வெளிப்படுத்துகின்றனர்.

மசாலா டெம்ப்ளேட்டில் இன்ட்ரோ பாடல், கண்டதும் காதல், பஞ்ச் வனங்கள், 'மாஸ்' சண்டைகள் என பெரு நடிகரிடம் ரசிகர்கள் எதிர்பார்க்கும் அனைத்தையும் ஒருசேர கலந்து படத்தை தொடங்குகிறார் இயக்குநர் பாபி. ஆங்காங்கே சிரஞ்சீவியின் நகைச்சுவை பயனளிக்கிறது. முதல் பாதி முழுவதும் மகிழ்ச்சியாக நகரும் படத்தை தனது உடல்மொழி, நையாண்டியால் தாங்குகிறார் சிரஞ்சீவி. ஆனால், அதுவும் ஒருகட்டத்திற்கு பிறகு அயற்சி கொடுக்க படம் இடைவேளையை நெருங்கும்போது சூடுபிடிக்கிறது.

இரண்டாம் பாதியில் ரவி தேஜாவின் வருகை நிமிர்ந்து அமர வைக்க, பிரகாஷ்ராஜ் + சிரஞ்சீவி என மூன்று பெரிய நடிகர்களை மையமிட்டு நகரும் கதை நெருடலில்லாமல் பயணிக்கிறது. சிரஞ்சீவிக்கும் - ரவி தேஜாவுக்குமான ஈர்ப்பும், அவர்களுக்குள்ளான சில உணர்ச்சிகரமான காட்சிகளும் பொருந்துகின்றன.

ஆர்தர் ஏ.வில்சனின் ஒளிப்பதிவில் பிரமாண்டமான காட்சிகள் ஒட்டுமொத்த படத்துக்கும் அழகூட்டுகின்றன. 'பூனகாலு லோடிங்', 'வீரய்யா' பாடல்கள் தேவிஸ்ரீபிரசாத் இசையில் கவனம் ஈர்க்கின்றன. சண்டை, சென்டிமென்ட், சில நையாண்டி காட்சிகளுக்கும் டிஎஸ்பியின் இசை வலு சேர்க்கிறது. நிரஞ்சனின் படத்தொகுப்பு காட்சிக்கு காட்சி 'மாஸ்' கூட்ட உதவுகிறது.

பிரச்சினையை மையமாக கொண்டு படம் நகரும் போது, நடுவில் வரும் பாட்டு, சீண்டல் காட்சிகள் பிரியாணிக்கு நடுவில் வரும் ஏலக்காய் போல தொந்தரவு. மொக்கையான 'ரோ' உளவுப் பிரிவு, பலவீனமான உச்சக்கட்டக் காட்சி, தேவையில்லாத பாடல், பல இடங்களில் ஒட்டாத உணர்வுக்காட்சிகள், ஆங்காங்கே தலைதூக்கும் தர்க்க மீறல்கள் சோர்வு.

மொத்தத்தில் நீங்கள் சிரஞ்சீவி, ரவி தேஜா ரசிகர்களாக இருந்தால் 'வால்டர் வீரய்யா' உங்களை ரசிக்க வைக்கும். பொதுப் பார்வையாளர்களுக்கு வழக்கமான மசாலா சினிமாவாக சில ஏமாற்றங்களைக் கொடுக்கலாம்.



## முதல்வரானார்...

வைத்தார்.

கூட்டம் தொடங்கப்பட்டபோது அதனை நடத்துவதற்குத் தேவையான நிறைவெண் (கோரம்) இருந்தது என்பதாலும் முதல்வர் தெரிவு பற்றிய அறிவிப்புச் செய்யப்படுவதற்கான நேரம் வரையில் கூட்டத்தின் நிறைவெண் குறித்து எந்தவொரு உறுப்பினரும் ஆட்சேபனை கிளப்பாததாலும் உள்ளூராட்சி ஆணையாளரின் முடிவு தவறானது என்று சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பான தமது ஆட்சேபனையை கூட்டத்தில் இருந்த 20 உறுப்பினர்களும் எழுத்து மூலமாக வழங்கியிருந்தனர்.

இந்த நிலையில் இன்று அதிகாலை வெளியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானி அறிவித்ததில் ஆனல்ட் யாழ். மாநகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் 66(ஏ) ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபையில் 2023.01.19 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் புதிய முதல்வர் தெரிவு பிரகடனப்படுத்தப்படாது அக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. எனினும் யாழ்ப்பாண மாநகர சபையில் 2023. 01.19 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் இம்மனுவல் ஆனல்ட் யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய முதல்வராக மேற்குறித்த சட்டத்தின் 66 (ஈ) (5)ஆம் பிரிவின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பதை வெளிப்படுத்துகின்றேன்.

இவ்வாறு ஆணையாளர் அந்த வர்த்தமானி அறிவிப்பில் தெரிவித்திருக்கிறார்.

(உ)

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிறை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.01.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781